

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து:** ஆசியாவில் உள்ள கிறிஸ்தவர்கள்: ஆசியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் நற்செய்திக்கு சொல்லாலும், செயலாலும் சான்று பகர்ந்து, உரையாடல், சமாதானம், பரஸ்பர புரிந்துணர்வு ஆகியவற்றை குறிப்பாக மற்ற சமயத்தவரோடு ஆதரிக்க வேண்டுமென்று

**நவம்பர் மாத கரு** : பிற சமயங்களோடும் கலாச்சாரங்களோடும் உறவாடல்

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| நவ 12 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |
| நவ 13 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| நவ 14 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| நவ 16 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | ஸ்காட்லாந்து புனித மார்கரீத், புனித ஜெர்த்ரூது |
| நவ 17 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | அங்கேரி புனித எலிசபெத்து |
| நவ 18 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பேதுரு, பவுல் பேராலயங்களின் நேர்ந்தளிப்பு |
| | காலை 11.00 | திருமணம் (த) | மார்க் துரைசிங்கம் பிள்ளை மாரிமுத்து & எஸ்தர் செல்வத்தியா |
| நவ 19 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா - கொடியேற்றம் |

## பங்கு நடவடிக்கைகள்

| நவ 12 ~ 18 | மாலை 7.30 | புலூமா | அதிச வாரம் |
|---|---|---|---|
| நவ 12 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) - இறுதி வகுப்பு |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) - இறுதி வகுப்பு |
| | காலை 10.30 | புந்தோங் தீகா | கிறிஸ்து அரசர் சிற்றாலய துப்புரவு பணி |
| | மாலை 7.30 | ஆலயம் | கிஅ & அவே சிற்றாலய பாடல்குழு பயிற்சி |
| நவ 13 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | பஒகு கூட்டம் |
| நவ 14 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | காலை 9.30 | பெர். மை 1-1 | மூத்தோர் பணிக்குழு கூட்டம் |
| நவ 16 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| நவ 17 வெள் | மாலை 7.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு விளக்கவுரை (பெற்றோர்கள்& ஞானப்பெற்றோர்கள்) |
| நவ 18 சனி | மாலை 4.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு |
| | மாலை 5.30/6.00 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| நவ 19 ஞா | மாலை 7.00 | பெர். மையம் | படம் திரையிடப்படுதல்- யோவான் நற்செய்தி |

<u>நவம்பர் & டிசம்பர் மாத திருமணங்கள் 2017</u>

| | | | | |
|---|---|---|---|---|
| நவ 25 | காலை | 11.00 | சடங்கு (ஆ) | லோகேஷ் த/பெ பரமேஸ்வரன் & டேட்ரியா மார்சியா மாக்கஸ் |
| நவ 25 | மாலை | 4.30 | சடங்கு (ஆ) | இந்திரன் த/பெ பிரனவசொருபன் & மெலனி அருள் த/பெ அருள்சாமி |
| டிச 2 | காலை | 11.00 | சடங்கு (த) | மோகனதாஸ் த/பெ ரமட் கிருஷ்ணன் & அற்புதஜூலி த/பெ அந்தோணி |
| டிச 2 | மதியம் | 2.00 | திருமணம் (த) | எட்வின் ஜெயராஜ் த/பெ குழந்தைசாமி & எக்னிஸ் த/பெ சந்தனசாமி |
| டிச 2 | மாலை | 4.30 | திருமணம் (த) | நோவெல் ராஜ் த/பெ வின்சென்ட் போல் & மோனிக்கா ராஜ் மோகனம்பால் த/பெ விக்னேஷ் |
| டிச 9 | காலை | 11.00 | திருமணம் (ஆ) | தேவ் தேவேந்தரன் த/பெ முத்துராமன் & வெனிசா சிபில் த/பெ S. மைக்கல் |
| டிச 9 | மாலை | 4.30 | திருமணம் (த) | அலெக்சாண்டர் ஜோசப் த/பெ ஜோசப் & கிறிஸ்டினா த/பெ ஞானமணி |

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. குழந்தைகள் கிறிஸ்துமஸ் திருப்பலி & விருந்து: கருத்து:** குளுமையான கிறிஸ்துமஸ் **நாள்:** 17 டிசம்பர் 2017 (ஞாயிறு) **நேரம்:** காலை 9.00 ~ மதியம் 12.00 வரை இடம்: பெர். மையம். பங்கு சிறார்களுக்கான இறைவார்த்தை குழு பாலர் பள்ளி ~ வகுப்பு 6 வரை உள்ள குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் திருப்பலி & விருந்தை ஏற்பாடு செய்திருக்கிறது. **12 நவ 2017 (ஞாயிறு)** முதல் 7.00மணி & 9.00மணி திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டப வெளிப்புறத்தில் உங்களது குழந்தைகளின் பெயர்களை பதிவு செய்யலாம். **இறுதி நாள்: 3 டிச 2017 (ஞாயிறு).** தயவு செய்து இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.!

**2. எழுப்புதல் குணமளிப்பு திருப்பலி 2017 (தமிழ்):** திவ்விய நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணைக் கொண்டாட்டத்தில் வழிந்தோடும் குணமளிப்பின் அருளின் வழியாக இறையரசை அனுபவிக்க அனைவரும் அழைக்கப்படுகிறீர்கள். நாள்: 1 டிச 2017 (வெள்) நேரம்: மாலை 6.00 இடம்: புலூமாதே

**3. செபமாலை**: 13 நவ 2017 (திங்) மாலை 8.00க்கு முனிசிபல், புனித செபஸ்தியார் சிற்றாலயத்தில் செபமாலை நடைபெறும்.

**4. சமய, சிந்தனைக்குரிய, நன்மதிப்புடைய படங்களின் திரையீடு:** யோவான் நற்செய்தி **நாள்**: 18 நவ 2017 (சனி) **நேரம்**: மாலை 7.00மணி **இடம்**: பெர். மையம் **வகை**: பொதுவானது. **படத்திற்கான நேரம்**: 180 நிமிடம்

**5. மூத்தோர் பணிக்குழு:** நமது பங்கிலுள்ள வயதான உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பங்கு ஒரு குழுவை தொடங்க எண்ணியுள்ளது. இதற்காக நாம் வாரத்தில் ஒரு காலைப்பொழுதை அர்ப்பணிக்க எண்ணுகிறோம்; இதில் இறைவார்த்தை வாசிப்பு, சிந்தனை, குறுகிய காணொளி காட்சி, சீட்டு விளையாட்டுகள், இலகுவான உடல்பயிற்சி மற்றும் மதிய உணவும் இடம் பெறும். இந்த நோக்கத்திற்காக தங்களை அர்ப்பணிக்க ஒவ்வொரு செவ்வாய் காலை 9.00 முதல் மதியம் 12.00 வரை எங்களுக்கு தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். எந்த சிறப்பு திறமைகளும் தேவையில்லை. தன்னார்வலர்களுக்கான ஆரம்ப கூட்டம் 14/11/17 (செவ்) காலை 9.30க்கு பெர்.மை 1-1இல் நடைபெறும்.

**6. புவிடிபா:** கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள், 2018 நாள்காட்டிகள் மற்றும் பண அன்பளிப்பு உறைகளை 29/10/17 முதல் ஒவ்வொரு ஞாயிறும் காலை 7.00 & 9.00மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யப்படும். தயவு செய்து ஆதரவை தாருங்கள். அவர்களின் இந்த திட்டம் ஏழைகளுக்கு உதவுவதாகும்.

**7. கவனத்திற்கு:** பங்கு வளாகத்திற்குள் உள்ள விவகாரங்கள்/ பிரச்சினைகளுக்கு மட்டுமே குருவானவர்கள் பொறுப்பேற்பார்கள். ஆலயத்தின்/ பங்கின் வளாகத்திற்கு வெளியே உள்ள விவகாரங்களுக்கு, உதாரணம்: கையேடுகள், சுற்றறிக்கைகள், இதர வாசிப்பு உபகரணங்கள் அல்லது அறிமுகப்படுத்தும் உபகரணங்களின் விநியோகத்திற்கும், அனைத்து வகையான நோக்கங்களுக்காக பிரச்சாரம் செய்வதற்கும் குருவானவர்கள் எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார்கள்.

**8. பங்கு சந்தா: தற்போது ஒவ்வொரு குடும்பமும் ஒரு பெயரளவு தொகை (ரிம 10/-) மட்டுமே சந்தாவாக செலுத்துகின்றனர். உண்மையில் இது வழி அல்ல. பழைய ஏற்பாட்டில் பத்திலொரு பாகம் செலுத்துவது பற்றி நாம் கேட்டிருக்கிறோம்**: இச 14:22-26 "ஆண்டுதோறும் உன் நிலத்தில் விளையும் எல்லாப் பலன்களிலும் பத்திலொரு பாகத்தைப் பிரித்தெடு: **நாங்கள் 10 விழுக்காடு கேட்கவில்லை! ஆலய நற்பணிக்காக, வேலை செய்யும் ஒவ்வொரு திருமணமாகாத மூத்தவரும் ஒரு பெயரளவு தொகையை சந்தாவாக செலுத்த வேண்டும். இது இப்பங்கில் 2018 லிருந்து செயல்படுத்தப்படும்.**

**9. மறைக்கல்வி:** மறைக்கல்வி புதிய உருமாற்ற நிகழ்வை ஒட்டி, நமது குழந்தைகளுக்கு முகாம்களை தயார்படுத்தவும், கற்பிக்கவும் தன்னார்வலர்களாக இன்னும் அதிக மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எங்களுக்கு மேலும் 20 லிருந்து 30 பேர் தேவைப்படுகின்றனர். தயவு செய்து ஆதரவு தர முன்வாருங்கள். ஆர்வமுள்ளோர் தொடர்புக்கு: எட்வர்ட் (012-5121722)/ சுரேஷ் (012-4146895) அல்லது உங்களது பெயர்களை பங்கு அலுவலகத்திலும் கொடுக்கலாம்.

**10. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 18 நவ 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**11. தற்காலிக பங்கு:** நீங்கள் ஓர் இடத்தில் 6 மாதங்களுக்கு மேலாக தங்கி வேலை செய்தால் தொழில்நுட்ப அடிப்படையில் நீங்கள் அவ்விடத்திலுள்ள பங்கின் உறுப்பினர் ஆகிறீர்கள். உதாரணத்திற்கு நீங்கள் பெட்டாலிங் ஜெயாவில் தங்கி வேலை செய்தால், உங்களுக்கு அருகிலிருக்கும் பங்கில் உங்களை நீங்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். நீங்கள் எந்த கத்தோலிக்க ஆலயத்திற்கும் அடிக்கடி திருப்பலிகளுக்கு செல்லலாம் ஆனால் அது உங்களுடைய பங்கு ஆகாது/ நீங்கள் திருமுழுக்கு பெற்ற பங்கும் உங்கள் பங்கு என உரிமை கொண்டாடவும் முடியாது. நாட்டாச்சி எல்லைகளே உங்களுக்கு சொந்தமானவற்றை தீர்மானிக்கின்றன. சம்பந்தப்பட்ட வட்டாரத்திலிருக்கும் ஒரு பங்கு குருவானவர் தனது பங்கு மக்களுக்காக அருள்சாதன தேவைகளையும், ஆன்மீக தேவைகளையும் தனது பூலோக வரம்பிற்குள் நிர்வாகிக்க திருச்சபை சட்டம் அனுமதி அளிக்கிறது.

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி அக்டோபர் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **346,485.15** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **355,531.75** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**05/11/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 819.50 **காலை 9.00** - RM 2,021.55 **மொத்தம்** - RM 2,841.05

**2017** - RM 225.00 **ஏழைகளுக்கு** - RM 2,469.50 **ஜெபமாலை மாத நிறைவு** - RM 738.75 **அனைத்து புனிதர்கள் தினம்** - RM 1,211.30

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்